## ஆகஸ்ட்– 25 – சனி

**புனித லூயிஸ்**

**பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்: திபா. 85:10**

### முதல் வாசகம் : ஏசேக்கியல் 43 : 1 – 7

பின்னர் அம்மனிதர் கிழக்கு நோக்கிய வாயிலுக்கு என்னை அழைத்துச் சென்றார்.இதோ, ”இஸ்ரயேலின் ஆண்டவரது மாட்சி” கிழக்குப் பகுதியிலிருந்து வருவதைக் கண்டேன். அவரது குரல் பெருவெள்ளத்தின் இரைச்சல்போல் இருந்தது. நிலமோ அவரின் மாட்சியால் ஒளி வீசிற்று.நான் கண்ட காட்சி, அவர் நகரை அழிக்க வந்தபோது நான் கண்டது போன்றும், கேபார் ஆற்றோரம் நான் கண்டது போன்றும் இருந்தது. நான் முகங்குப்புற விழுந்தேன்.ஆண்டவரின் மாட்சி கிழக்கு நோக்கிய வாயில் வழி கோவிலினுள் நுழைந்தது.பின்னர் ஆவி என்னைத் தூக்கி உள்முற்றத்திற்கு அழைத்துச் சென்றது. ஆண்டவரின் மாட்சி கோவிலை நிரப்பிற்று.அம்மனிதர் என்னருகில் நிற்கையில் கோவிலிருந்து வேறொருவர் என்னுடன் பேசுவதைக் கேட்டேன்.அவர் உரைத்தது ”மானிடா! இது என் அரியணையின் இடம் என் கால்மணைக்கான இடம். இங்குதான் நான் இஸ்ரயேலருடன் என்றென்றும் வாழ்வேன். இஸ்ரயேல் வீட்டார் இனி ஒருபோதும் என் திருப்பெயரைத் தீட்டுப்படுத்த மாட்டார். அவர்களோ, அவர்கள் அரசர்களோ விபசாரத்தினாலோ, அவர்களுடைய அரசர்களின் உயிரற்ற சிலைகளினாலோ, தொழுகை மேடுகளில் தீட்டுப்படுத்த மாட்டார்.

**பதில்பாடல் :** நம் நாட்டில் ஆண்டவரது மாட்சி குடிகொள்ளும்.

### நற்செய்தி : மத்தேயு 23 : 1 – 12

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்துக் கூறியது ”மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள் செயலில் காட்டமாட்டார்கள். சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள் ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக்கூட முன்வரமாட்டார்கள். தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்கவேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள் தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள் அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக்கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றார்கள் சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி என அழைப்பதையும் விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் ”ரபி” என அழைக்கப்படவேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள். இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார். நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர். உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும். தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்“ என்றார்.

**தியானம்:** இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை இருவகையாகப் பிரிக்கலாம். முதவாதிகள், ஆன்மீகவாதிகள். மதவாதிகள் என்பவர்கள் சடங்கு, சட்ட திட்டங்கள் சம்பிரதாயங்கள், திருவிழாக்கள், வான வேடிக்கை போன்றவற்றில் மூழ்கி இவை தான் சமயத்தின் சாராம்சம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள். ஆன்மீக வாதிகள் மேற்கண்டவைகள் சமயத்தின் ஒரு அங்கம் என்பதை ஏற்றுக்கொண்டாலும் அவற்றையும் தாண்டிச் செல்ல வேண்டும் என்று எண்ணுபவர்கள். மேற்கண்டவை நமக்கும் கடவுளுக்கும் உள்ள உறவில் நாம் ஆழமாகப் போக உதவுபவை என்பதை அறிந்திருப்பவர்கள். கடவுளோடுள்ள இந்த உறவு தான் மதத்தின் சாராம்சமாக இருக்க வேண்டும் என்பதை அறிந்திருப்பவர்கள். பரிசேயர்கள் ஆன்மீக வாதிகளாக அல்ல மதவாதிகளாக இருந்த காரணத்தாலே இயேசுவால் கடுமையாகச் சாடப்பட்டனர். இன்றைய சூழ்நிலையில் மதவாதிகளின் எண்ணிக்கைத்தான் மலைபோல பெருகிக்கொண்டு இருக்கிறது. ஒரு வேளை இயேசு இப்போது வந்தாரென்றால் வெளிவேடக்கார கிறிஸ்தவ சமூகமே உனக்கு ஐயோ கேடு என்று சாடுவார். நாம் நம்முடைய வாழ்க்கையில் எப்படி இருக்கின்றோம்? என்பதை உணர்ந்து சிந்தித்து வாழ்வோம்.